DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 123/2019

List of Witness : Lw1

Prosecution Witness : PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | சிங்கராஜ் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | வீராச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 20/11/2025

(எதிரி ஆஜர் )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் இனுங்கனூரில்குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக தொழில் செய்து வருகிறேன். 12.06.2019 ஆம் தேதி நான் மார்க்கம்பட்டி காளியம்மன்கோவில் முன்புறமுள்ள டெம்போ ஸ்டாண்டில் எனது TN 28 A 9292 பதிவெண் கொண்ட ஹீரோ ேஹாண்டா இருசக்கர வாகனத்தை ஸ்டாண்டில் நிறுத்திவிட்டு டெம்போ வேனில் வாடகைக்காக ஓட்டிச்சென்றேன். 08.45 மணியளவில் டெம்போ ஸ்டாண்டில் இருந்து ஜெயபால் என்பவர் எனக்கு தொலைபேசியில் தொடர்பு கொண்டு எனது இருசக்கர வாகனத்தை யாரோ எடுத்து செல்வதாக சொன்னார். நான் இருசக்கர வாகனத்தை எடுக்கும் நபரை பிடிக்கும்படி கூறினேன். ஜெயபால், தண்டபாணி, பெரியசாமி மூவரும் சேர்ந்து எனது இருசக்கர வாகனத்தை எடுக்க முயன்றவரை துரத்தி சென்று மார்க்கம்பட்டி கூட்டுறவு சொசைட்டி அருகே வைத்து மடக்கி பிடித்து வைத்தார்கள். நான் வந்தவுடன் பிடித்து வைத்து இருந்த நபரை விசாரித்தபோது அவர் தனது பெயர் சரவணக்குமார் என்று கூறினார். அவரது அப்பா பெயர் முருகையா என்று கூறினார். ஊர் தாடிக்கொம்பு என்று கூறினார். நாங்கள் எதிரி மற்றும் எனது இருசக்கர வாகனத்தையும் இடையகோட்டை காவல் நிலையத்திற்கு சென்று சம்பவம் தொடர்பாக புகார் அளித்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனு நான் கொடுத்தது தான். அதில் உள்ள புகார்தாரர் கையொப்பம் என்னுடையது தான். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. ஆஜர் எதிரி தான் எனது வண்டியை திருட முயற்சி செய்த சரவணக்குமார் ஆவார். என்னிடம் காட்டப்படும் புகைப்படங்களில் உள்ள வாகனம் ஆஜர் எதிரியால் திருட முயற்சி செய்த என்னுடைய வாகனமாகும். புகைப்படங்கள் எண்ணிக்கை 4 **அ.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. எதிரி குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

S MOHANRAJ
Digitally signed by S MOHANRAJ
Date: 2025.11.20 17:05:33 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 20/11/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 123/2019

List of Witness : Lw2

Prosecution Witness : PW2

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஜெயபால் | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | சுப்பிரமணி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 20/11/2025

(எதிரி ஆஜர் )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் மார்க்கம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக தொழில் செய்து வருகிறேன். 12.06.2019 ஆம் தேதி மார்க்கம்பட்டி காளியம்மன்கோவில் அருகே உள்ள டெம்போ ஸ்டாண்டில் நான் தண்டபாணி, பெரியசாமி அனைவரும் இருந்தபோது (ஆஜர் எதிரியை சுட்டிக்காட்டி) ஆஜர் எதிரி சிங்கராஜ் என்பவரின் இருசக்கர வாகனத்தை எடுத்தார். சிங்கராஜ் என்பவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு உனது வண்டியை யாருக்காவது கொடுத்தியா என்று கேட்டோம். ஒரு நபர் வண்டியை எடுப்பதாக கூறினோம். அவர் தான் யாருக்கும் வண்டி கொடுக்கவில்லை என்று கூறினார். அதற்குள் ஆஜர் எதிரி அவரது வண்டியை எடுத்துக் கொண்டு சென்றவரை நாங்கள் மூவரும் துரத்தி சென்று மார்க்கம்பட்டி கூட்டுறவு சொசைட்டி அருகே வளைத்து எதிரியை பிடித்துவிட்டோம். எதிரியை விசாரித்தபோது அவர் தனது பெயர் சரவணக்குமார் என்றும் ஊர் தாடிக்கொம்பு என்றும் சொன்னார். சிங்கராஜ் வந்தவுடன் நாங்கள் எதிரி சரவணக்குமார் மற்றும் சிங்கராஜின் இருசக்கர வாகனம் ஆகியவற்றுடன் இடையகோட்டை காவல் நிலையம் சென்றோம். காவல் நிலையத்தில் சிங்கராஜ் சம்பவம் தொடர்பாக புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. எதிரி குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை.

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

S MOHANRAJ Digitally signed by S MOHANRAJ Date: 2025.11.20 17:05:42 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 20/11/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 123/2019

List of Witness : Lw3

Prosecution Witness : PW3

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பெரியசாமி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பழனிச்சாமி | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 20/11/2025

(எதிரி ஆஜர் )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் குருணைக்கல்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் மார்க்கம்பட்டி காளியம்மன்கோவில் டெம்போ ஸ்டாண்ட் அருகே சலூன் கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். 12.06.2019 ஆம் தேதி காலை 8.45 மணி இருக்கும் அப்போது (எதிரியை சுட்டிக்காட்டி) ஆஜர் எதிரி டெம்போ ஸ்டாண்டில் நிறுத்தி இருந்த சிங்கராஜ் என்பவரின் இருசக்கர வாகனத்தை எடுத்து கொண்டிருந்தார். அப்போது நானும், ஜெயபால், தண்டபாணி மூவரும் சிங்கராஜிற்கு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உனது இருசக்கர வாகனத்தை யாருக்கேனும் கொடுத்தியா என்றும் உனது வண்டியை ஒரு நபர் எடுத்து கொண்டு இருக்கிறார் என்றும் சொன்னோம். சிங்கராஜ் தான் யாருக்கும் வண்டியை கொடுக்கவில்லை என்று சொன்னார். அதற்குள் ஆஜர் எதிரியை வண்டியை எடுத்துக் கொண்டு சென்றவரை மார்க்கம்பட்டி கூட்டுறவு சொசைட்டி அருகே வைத்து மூவரும் சேர்ந்து பிடித்தோம். சிங்கராஜ் வந்தவுடன் எதிரியிடம் விசாரித்தபோது எதிரி தனது பெயர் சரவணக்குமார் என்றும் தாடிக்கொம்பை சேர்ந்தவர் என்றும் கூறினார். எதிரி மற்றும் இருசக்கர வாகனத்துடன் நாங்கள் இடையகோட்டை காவல் நிலையம் சென்று புகார் அளித்தோம். புகாரை சிங்கராஜ் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. எதிரி குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

S MOHANRAJ
Digitally signed by S MOHANRAJ
Date: 2025.11.20 17:05:50 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 20/11/2025

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the court Judicial Magistrate At Oddanchatram

Case No : CC 123/2019

List of Witness : Lw4

Prosecution Witness : PW4

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | தண்டபாணி | ஜாதி: | |
| தந்தை / கணவர் பெயர் : | பெருமாள் | தொழில்: | |
| கிராமம்: | | சமயம்: | |
| தாலுகா: | | வயது | |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969

Examination Date / சாட்சி விசாரணை தேதி :- 20/11/2025

(எதிரி ஆஜர் )

**அரசு தரப்பில் முதல் விசாரணை :**

நான் மார்க்கம்பட்டியில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக தொழில் செய்து வருகிறேன். 12.06.2019 ஆம் தேதி காலை 8.45 மணிக்கு மார்க்கம்பட்டி காளியம்மன்கோவில் அருகே உள்ள டெம்போ ஸ்டாண்டில் நான் இருந்தபோது டெம்போ ஸ்டாண்டில் நின்று கொண்டிருந்த சிங்கராஜ் என்பவரின் இருசக்கர வாகனத்தை (எதிரியை சுட்டிக்காட்டி) ஆஜர் எதிரி எடுத்தார். சிங்கராஜிடம் கேட்டபோது அவர் யாருக்கும் வண்டி கொடுக்கவில்லை என்று கூறினார். நானும், ஜெயபால், பெரியசாமி மூவரும் எதிரியை துரத்தி சென்று மார்க்கம்பட்டி கூட்டுறவு சொசைட்டி அருகே வளைத்து பிடித்தோம். விசாரித்தபோது அவர் சரவணக்குமார் என்று ஊர் தாடிக்கொம்பு என்று சொன்னார். சிங்கராஜ் வந்தவுடன் எதிரி மற்றும் வாகனத்துடன் இடையகோட்டை காவல் நிலையம் சென்றோம். சிங்கராஜ் இடையகோட்டை காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டது. எதிரி குறுக்கு விசாரணை செய்ய முன் வரவில்லை.

Signature of the witness
(சாட்சியின் கையெழுத்து)

Taken Down by me in Open Court and Read Over to the witness in the presence of the accused interpreted to him in Tamil and admitted by him/her to be correct.

S MOHANRAJ

Digitally signed by S MOHANRAJ
Date: 2025.11.20 17:06:02 +0530

Judicial Magistrate (FAC)
Oddanchatram.
Date : 20/11/2025